# சுகந்த தீபம்



அமரர்

## கு.சுகந்தீபன் அவர்களின்

நினைவு குறித்து வெளியிடப்பட்ட மலர்

12-06-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
பெற்றவளைக் கோவிலென்றும்
கைப்பிடித்தவளைக் காதலி என்றும்
உடன் பிறப்புக்களை உயிர் என்றும்
தேசத்தை உயிர் என்றும்
நண்பர்களை நல்லாசான் என்றும்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகிவிட்ட
எமது அன்புச் சுதனின்
பாதக் கமலங்களுக்கு இம்மலரை
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

தாய், மனைவி,
சகோதரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

21 • 07 • 1979



மறைவு

29 • 04 • 2008

# அமரர்
# கு.சுகந்தீபன் அவர்களின்

## திதி வெண்பா

சீர்பெறு சர்வதாரி சித்திரைச் சிறந்த செவ்வாயில்
பார்புகழ் சுகந்தீபன் பரன்கழல் நாடிச் சென்றான்.
ஏர் அபரபக்க இரு நவமி திதி அன்று
ஊர் கதற உயர்ந்துவிட்டான் உலகில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## பஞ்சபுராணம்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன் றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாம்தாம் ஆரோ
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேனும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கென்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வானரவும் திளைக்கும் செந்நீ
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார் இசுவிசும்பில் இருக்கலாமே.

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்றும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

சரணகம லாயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பழவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரந்த மணியணிபொன் மாலைசெக்கை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாகுமிந்த கனமதுறு நீள்சவுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவியுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திரு வேரகத்தின் முருகோனே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அமரர்

# குணரட்ணம் சுகந்தீபன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சிவபூமியாகிய ஈழநாட்டின் திலகம் எனத் திகழ்வது யாழ்ப்பாண மாவட்டம். அங்கு சைவமும் தமிழும் இரு கண்கள் எனப் போற்றும் மக்கள் வாழும் கிராமம் கொக்குவில். இக்கிராமம் பிரபல கல்விச்சாலைகளையும் தொழில்நுட்பக் கல்லூரியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்துடன் திறந்த பல்கலைக் கழகம், மருத்துவக் கல்லூரியையும் புதுமை வாய்ந்த ஆலயங்களான மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயம் மாத்தனை முருகன் ஆலயம், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ஆலயம், பொற்பதி விநாயகர் ஆலயம், சாயி துர்க்கை அம்மன் ஆலயம், கோணாவளை வைரவர் ஆலயம் ஆகியவற்றையும் கொண்டு விளங்குகின்றது. மேலும் பல கல்விமான்களையும் தொழில் அதிபர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இத்தகைய செல்வச் செழிப்புள்ள இக்கிராமத்திலே வசித்து வந்த அமரர் குணரத்தினத்திற்கும் (முன்னாள் உதவிப் பணிப்பாளர், விளையாட்டுத்துறை) சிவனேசரத்தினத்திற்கும் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) கனிஷ்ட புதல்வராக 1979ம் ஆண்டு ஆடி 21ம் நாள் அமரர் சுகந்தீபன் பிறந்தார். இவருக்கு பார்த்தீபன் (பொறியியலாளர்), பிரதீபன் (பொறியியலாளர்) எனும் இரு அண்ணன்மாரும் தர்ஷிகா (வங்கி உதவியாளர்) எனும் அன்புத் தங்கையும் உடன் பிறப்புக்களாகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் பயின்றார். 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றார். அத்துடன் யா/ இந்துக் கல்லூரியில் 6ம் ஆண்டிற்கான அனுமதிப் பரீட்சையில் 1348 பேரில் முதலாவது மாணவனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் யா/ பரியோவான் கல்லூரியிலும் 6ம் ஆண்டு அனுமதிப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று இடைநிலைக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் யா / பரியோவான் கல்லூரியிலேயே கற்று வந்தார். இவர் அக்கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் விளையாட்டுக்கள் கடற்சாரணர் மற்றும் கழகங்களிலும் தலைமைதாங்கித் தனது திறமைகளை வெளிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார். இவர் பாடசாலை துடுப்பாட்ட அணியில் சேரவிரும்பினார். தந்தையார் தன்னைப்போல் விளையாட்டில் கூடிய ஆர்வம் காட்டாதிருக்க அவர் வீட்டிலே அருகிலுள்ள மைதானத்தில் விளையாடுவதற்காக ஒரு தரமான துடுப்பு வாங்கிக் கொடுத்தார். தந்தையார் இதனை வாங்கிக் கொடுத்ததும் அளவில்லா ஆனந்தமடைந்த இவர் அண்ணன்மாருடன் விளையாடினார்.

பள்ளிப் பருவத்தில் வீட்டிலும் செல்லமாக இருப்பார். தாய்மாமனார் காலஞ்சென்ற பேராசிரியர் மகேஸ்வரனுக்கும் செல்லப்பிள்ளை. பேராசிரியர் தன் வீட்டிற்கு முன்னால் போகும்போது "நீங்கள் பல்கலைக்கழகத்திற்குத்தான் பேராசிரியர் எங்களுக்கல்ல" என்றும் வேறு நக்கல்களும் கூறி ஒழித்து விடுவார். பேராசிரியர் கூறுவார் "அண்ணன்மார் பொறியியலாளர், நீ ஒரு டாக்டராக வரவேண்டும்" என்று. அதற்கு சிறு புன்முறுவலுடன் "ஆம் நிச்சயமாக வருவேன்" என்று கூறுவார். பேராசிரியரின் இறுதிக் காலத்தில் வைத்தியசாலையிலும் வீட்டிலும் அன்பாகவும் பண்பாகவும் அவருக்குப் பணிவிடை செய்துவந்தார். அவர் இறந்த செய்தியைக் கேட்டதும் அவருடைய அறையிலேயே வீழ்ந்து அழுத காட்சி எல்லோரையும் கலங்க வைத்தது. மாமனார் விரும்பியபடியே உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்விகற்று மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெற்று மருத்துவத் துறைக்கு தெரிவானார். அதனைக் கேட்க மாமனார் இல்லையே என மிகவும் மனம் வருந்தினார். இவர் மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும்போது யாவராலும் விரும்பப்படும் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார்.

இத்துறையில் 2nd MBBS சித்திபெற்றுத் தொடர்ந்து மிக விருப்போடு கல்வி கற்றுவரும்வேளை ஆண்டவன் சோதனையோ யார் கொடுத்த போதனையோ விதி விளையாடத் தொடங்கிவிட்டது. படிப்பினை பாதியிலேயே நிறுத்தித் திசை திருப்பப்பட்டார். யாவரும் புத்தி கூறியும் கேட்காது நண்பர்களுடன் பொழுதை போக்கிவரத் தொடங்கினார். இவர் சிறுவயதிலிருந்தே யாவருக்கும் இனியவராய் உற்ற தோழனாய் பெரியவர் சிறியவர் என்ற பேதம் பாராது இன்னார் இனியார் என்ற பேதமின்றி யார் எது செய்யக் கேட்டாலும் மறுப்பின்றி அதனை நிறைவேற்றிக் கொடுக்கும் பெருந்தலைவன். இவர் படித்துக்கொண் டிருக்கும்போதே ஊரில் நிகழும் சமூக விரோதச் செயல்களைக் கண்டித்து குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினையாயினும் சரி, கிராம மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையாயினும் சரி மிக இலகுவாகத் தீர்த்து வைத்து வெற்றியும் கண்டார். சிறியோர் தொட்டுப் பெரியோர் வரை இவரை அன்பாகச் சுதன் என்று அழைப்பர். இவர் தனது மருத்துவத்துறையில் கற்ற கல்வியில் பெற்ற அனுபவம் தேடிய செல்வாக்கைப் பயன்படுத்தி எத்தனையோ நண்பர்களுக்கு உண்டான நோயைக் குணப்படுத்த உதவிய சிறந்த உத்தமர். இவர் எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் வந்தும் வேதனைகளுடன் பல சாதனைகள் புரிந்த உத்தமன். இவர் பொற்பதி விநாயகர் ஆலயத் திருவிழா சரி, ஏனைய ஆலயங்களின் திருவிழாக்களில் சரி நண்பர்களை ஊக்குவித்து திறம்பட நடாத்த உதவியவர். மும்மொழியிலும் பேச்சாற்றல் மிக்கவர். ஆதலால் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார்.

இவர் இளம்பராயம் தொட்டு இறக்கும்வரை வீடு சுத்தமாகவும் ஆலங்கார மாகவும் இருக்கவேண்டும். வாசனைப் புகை எழுப்பி நாள் தோறும் வீட்டினை சுத்தமாக வைப்பார். வீடு சுகந்த தீபமாக இருக்கவேண்டுமென விரும்பினார்.

இவர் கோண்டாவிலைச் சேர்ந்த பரமேஸ்வரநாதன் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்) வசுந்தராதேவி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) தம்பதியரின் கனிஷ்ட புதல்வி யஷீலா என்னும் பெண்ணை 2005ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். அவரது அந்த மகிழ்ச்சியான இளமைக்காலம் நீண்ட காலம் நிலைக்கவில்லை. தந்தை இறந்தபின் தானே குடும்பப் பொறுப்பென எண்ணினார். இளமைத் துடிப்பைக் குறைத்து பொறுப் புள்ளவராகவும் கோபத்தன்மை குறைத்து இனியவராகவும் மாறிவரும்வேளை இப்பொய்யுலக வாழ்வை நீத்துப் பொன்னுலக வாழ்வினை எய்தினார்.

சிலர் பிறப்பது ஓரிடம் வளர்வது இன்னோரிடம் மடிவது வேறோர் இடம். ஆனால் சுகந்தீபன் சொந்த மண்ணிலே பிறந்து சொந்த மண்ணிலே வளர்ந்து சொந்த மண்ணிலே மரித்தாரே அதுவே பெரும்பாக்கியம். 29.04.2008 செவ்வாய்க்கிழமை நாட்டின் ஒளி அணைந்தவேளை வீட்டின் சுகந்ததீபமும் அணைந்தது. அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பொற்பதி விநாயகர் கழல் வணங்கிப் பிரார்த்திப்போமாக. நல்லூர் முருகன் தேரடி செல்லப்பா சுவாமிகளின் மகாவாக்கியங்களை நினைவு கூர்ந்து ஆறுதல் அடைவோமாக.

- எப்பவோ முடிந்த காரியம்
- முழுவதும் உண்மை
- ஒரு பொல்லாப்பும் இல்லை
- யாம் அறியோம்
- எல்லாம் செப்படி வித்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் மணி விழாவின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் ஓர்வலி.....

மனுநீதி கண்ட சோழன் காலத்தில் கன்றை இழந்த பசு தனது ஆற்றொணாத் துயரத்தை மணியடித்து வெளிப்படுத்தி அரசனிடம் நீதி கேட்டது. நான் எனது வீரமகனை, சிங்கக்குட்டியை இழந்தேன். யாரிடம் நீதி கேட்பது? எங்கே மணியடிப்பது. செய்வது அறியாது தவிக்கின்றேன். இவ்வருடம் சித்தரை மாதச் சிறந்த நன்நாள் பார்த்து அம்மாவுடன் அறுசுவை உண்டாயே. சிறுவயதில் ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த மாணவனாக விளங்கி பரிசில்கள் பல பெற்றெடுத்தாய். உயர்தர வகுப்பில் போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று மருத்துவத் துறைக்கு நீ தெரிவானபோது ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் என்ற கூற்றுக்கிணங்க அளப்பிலா ஆனந்தம் அடைந்தேன். உலகில் சிறந்த இருபெரும் சேவைகள் (1) குருத்துவச் சேவை (2) மருத்துவச் சேவை. தாயார் குருத்துவச் சேவையிலுள்ளபோது நீ மருத்துவச் சேவைக்கு காலடி வைத்தாய். மருத்துவத்துறையில் நீ மிளிர்ந்து மலர்ந்துவரும் காலத்தில் நிடத நாட்டு மன்னன் நளனுக்கு நடந்த கதிபோல் சனீஸ்வரன் உனது படிப்பிற்கு குறுக்கே நின்றுவிட்டான் போலும். ஆண்டவன் சோதனையோ யார் கொடுத்த போதனையோ? தீயிலே இறங்கிவிட்டாய். திரும்ப வந்து கல்வி தொடருவாய் என எண்ணியிருந்தேன். காலமும் ஒருநாள் கைகொடுக் கும். அதுவரை காத்திருப்பேன் என எண்ணி ஏமாந்துபோனேன். வேதனைக்கு ஒரு மகனை வீட்டிலே வளர்த்து வந்தேன். சோதனைக்காலம் நெருங்கியதே உனக்கு. வேதனை வந்து சேர்ந்ததே எனக்கு.

மகனே உன்னுடைய அபரிதமான துணிச்சல், தன்னலம் பாராது மற்றவர்களுக்கு முன்னின்று உதவுதல், இரக்கத் தன்மை, சமூகத்திற்கு நீ செய்த சேவை எண்ணிலடங்கா. உனது செல்வாக்கைப் பயன்படுத்தி நண்பர்களுக்குண்டான நோயைக் குணப்படுத்த உதவினாயே அன்று. நாய்போல் தெருவில் படுத்திருக்க விதி வந்ததே இன்று. அபிராமிப் பட்டருக்கு அம்பாள் அருளால் அமாவாசை பௌர்ணமி ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கோ பௌர்ணமி அமாவாசை ஆனது காலன் அருளால். பஞ்சுமெத்தையில் படுக்கவேண்டிய நேரத்தில் நீ பாயின்றி தெருவில் கிடந்த காட்சி நெஞ்சில் மாறாவலியை ஏற்படுத்தியுள்ளது. ஆலமரம்போல் உம் நிழலில் அனைவரையும் அரவணைத்தாய். பாலைவனமாகப் பரிதவிக்க விட்டுச்சென்றாய்! நான் இப்போது ஓர் மாடிவீட்டு ஏழை.

கருவிலே வளரும்போதே காலமும் குறித்து வைத்தானோ? காலன் உனது சேவை காணும் என்று எண்ணினானோ!

உந்தன் கனவின் உன்னத உணர்வை யாரறிவார். தூரவழி போவதற்கா அம்மா போட்டுவருகிறேன் எனக் கூறினாய். உந்தன் தூய உள்ளத்தை யாரறிவார். பாச விளக்கே நீ அணைந்தாலும் உந்தன் சேவை என்றும் அழியாது. சுவர்க்கம் நீ பெறச் சுதனாரை வேண்டுகின்றேன்.

"சாவது நீயாக இருக்கட்டும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்"

அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் ஆற்றொணா அலைகள்

வானம்பாடிபோல் கானம்பாட வேண்டிய நேரத்தில்
என்னை ஒப்பாரிப் பாடலுக்குத் தள்ளிவிட்டுச் சென்றீர்களே
இல்லத்தரசியாய் இனித்திருக்க வேண்டிய நாட்பொழுதினிலே
விதவைக்கோலம் பூணக் காலனொடு கரை கண்டீர்களோ
அழிந்தும் அழியாத கோலமையா
மலர்ந்தும் மலராத வேடமையா
தங்கத் திருமகனே உந்தன்
அங்கத் திருவுருவைக் காணத் துடியாய் துடிக்கிறது நெஞ்சம்
உந்தன் பூதவுடல் பூதலத்தில் சங்கமமாகியதோ ஐயா!
நாமெடுத்த பூதாக்கலம் வளரமுடியாது இருக்கிறதே ஐயா!
இணைந்த நெஞ்சமாயிருந்தோம்
உறவினில் மஞ்சமாகத் திகழ்ந்தோம்
தஞ்சமென உதித்திட்ட மழலைமுகம்
காண்பதற்கு முன் சென்றீர்களோ
காலம் கதை பேசவில்லை ஞாலம் கதை பேசிவிட்டதே
எந்தனுக்கு என்ன துணையோ அறியேன்
வாழ்ந்த காலமெல்லாம் – நீங்கள்
வையகம் மதிக்க வாழ்ந்தீர்களே!
மருத்துவத் துறையின் நாடி தளர்கிறது ஐயா
அடியேனும் நாடிகள் தளர்ந்து வாடுகிறேன், பதறுகிறேன்
இனியார் எனக்கு துணையோ அறியேன்.
காப்பியங்கள் கண்ட கதாநாயகனும் கதாநாயகியும் போல
எமது வரலாறோ பொன்னெழுத்துக்களால் பதிக்க செய்துவிட்டீர்களே
முத்து விழா காணவேண்டிய வயதினிலே
முத்தாரம் பார்க்காது கண்களை மூட வைத்து விட்டீர்களே
நெஞ்சமோ உணர்வால் துடிக்குதையா
ஆவியாக வந்து என்னைக் காத்தருளவேண்டும்.
குடும்பம் என்னும் கதம்பத்திலே சங்கமிக்காது
மழலைச் சொல் கேளாது ஆற்றொணா அலைகளில் பரிதவிக்கவிட்டு சென்றீர்களே!
உலகம் ஒரு நாடகமேடை அதில் ஆண்களும் பெண்களும் நடிகர்கள் என
பறை சாற்றினார் ஷேக்ஸ்பியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலையாத பாசமெல்லாம் குலைந்து போனதே!

மும்மூர்த்திகளாய் மூவெழுத்து (பாசம்) ததும்பிய
விருட்சத்தின் நிழலிலே
இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்ந்தோமே!
5ம் ஆண்டுவரை நாம் சேர்ந்து சைக்கிளில் சென்று வருவோம்
முக்காலமறிந்த இறைவனுக்கே எம் ஒற்றுமை
பொறாமை கொள்ளச் செய்ததோ?
தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான் என்றிருந்தோம்
இன்று எம் வீரத்தம்பி எம்மை விட்டுப் பிரிந்துவிட்டாயே!
எள் என்றால் எண்ணை கொண்டுவரும் தம்பி
எம் எண்ணத்தை சிறகடிக்க வைத்துவிட்டாயே!
உன் ஊருக்காய் நாட்டுக்காய் செய்தவை எண்ணிலடங்கா
உன்னைக்கண்டால் படையும் நடுங்கும், ஏன் ஊரே நடுங்கும்
ஊருக்கு காவல் தெய்வமும் நீயே!
சிறுவயதில் நாம் மூவர் பனைவளவில் பனைமட்டை கொண்டு
கிறிக்கட் விளையாடிக் குதூகலித்தோம்
அந்தநாள் ஞாபகம் வந்ததே தம்பி!
குலையாத பாசமெல்லாம் குலைந்து போனதே!
எத்தனை பேர் துணையிருந்தென்ன?
நீ ஒருத்தன் போதுமென எண்ணியிருந்தோம்
எம் எண்ணமெல்லாம் வீணாகியதே!
நெஞ்சம் பொறுக்கவில்லையே தம்பி!
அமைதியான வாழ்வை ஆண்டவன்
விதி இதுவென அழித்துவிட்டானே!
அருமைத்தம்பி அழைக்கமுடியாத நெடுந்தூரம் சென்றுவிட்டாயே!
அவனியில் நிகழ்ந்த அநியாயத்தின் ஆறாத வடு
எம்மை ஆற்றொணா துயரத்தில் மூழ்கடிக்க செய்ததே!
முருகா இதுவும் உன் திருவிளையாடலா?

உன் ஆத்மா சாந்தியடைய நல்லூரான்
திருவடியை நாடி நிற்கிறோம்.

**அன்புச் சகோதரர்**
**பார்த்தீபன், பிரதீபன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதுரர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையின் பூப்புனித நீராட்டு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் சோக உள்ளம்

ஆசை அண்ணா! உன் பண்பை எழுதவா? பாசத்தை எழுதவா?
படிப்பின் பெருமையை எழுதவா?
புத்திக் கூர்மைதான் என்னே
உற்றார், உறவினர் ஊராரிடம்
காட்டும் அன்புதான் என்னே
ஒருதாய் வயிற்றில் உதித்த உன் அண்ணன்மாரின்
முகம் காணாது எங்கு சென்றாய்?
ஆசை அண்ணாவே!
எனக்கென்ன குறை என்றிருந்தேன்
எல்லாம் கனவாச்சே என் எண்ணம் கனவாகிவிட்டதே
இந்தப் புத்தாண்டு புனிதமான நன் நாளிலே
கைவிஷேசமும் தந்து ஒருமித்து ஒருங்கே இருந்து
மகிழ்வோடு அறுசுவை உண்டதை மறக்கமுடியவில்லை.
மருகன் வயிற்றிலுள்ளபோது
மனைவி மனம் நோக எங்கு சென்றாய்?
சிந்தைக்கினிய ஆசை அண்ணாவே சீரிய குணக்குன்றே
தந்தைக்கு நிகராய் நின்று தரணியில்
தலைநிமிர வாழவைத்தாய்
எந்தைக்கு வந்த காலன் திடீரென வருவான்
என எண்ணவே இல்லை.
ஆசையண்ணாவே இனி எப்போ உன்முகம் காண்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நனவெல்லாம் கனவாகிப் போனதுவே...

நீண்டகாலம் எம்முடன் வாழ்ந்திடுவீரென
நாம் எண்ணியிருக்க
காலனவன் உமைப் பிரித்துவிட்டானே?
வெகுவிரைவில்
டாக்டராகி குடும்பத்திற்கும் நாட்டிற்கும்
நற்சேவை செய்வீரென நம்பியிருந்தோம்
நனவெல்லாம் கனவாகிப் போனதுவே!
சுதன் அண்ணா; காலனவன் பொறுக்காது
கலைத்து விட்டான் எம் கனவை
சுதன் அண்ணா உன் சுந்தர முகத்தை
இனி எப்போது காண்போம்?
சிரித்த முகம்! செழுமை மிகு வார்த்தைகள்!
உரித்தான இனிய குணம், உபசரிக்கும் நெஞ்சம்...
கருத்தில் கண்ணியம் காட்சிக்கு எளிமை
மரித்துத்தான் போனீரோ?
மனந்தேற மறுக்கிறதே!

உன் ஆத்மா சாந்திபெற நல்லூரான் திருவடியை இறைஞ்சுகிறோம்.

**நீங்கா நினைவுகளுடன்**
**உடன்பிறவாச் சகோதரர்**

## அன்பர்களே

| | | |
|---|---|---|
| நல்ல நாள் | - | இன்று |
| நல்ல வெகுமதி | - | மன்னிப்பு |
| அறியக் கூடாதது | - | அடுத்தவன் செயலை |
| இருக்க வேண்டியது | - | மானம் |
| இருக்கக் கூடாதது | - | ஆணவம் |
| தேவைக்கேற்றது | - | சாமர்த்தியம் |
| தேவையற்றது | - | விவாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளாத் துயிலில் நீங்கள்
## மீளாத் துயரில் நாங்கள்....

எங்கள் வீட்டுக் காரியமானாலும் எந்தவீட்டுக் காரியமானாலும்
கலகலப்பாக நண்பர்களுடன் நல்லபடி நடத்தி முடிப்பீரே!
தலைமைகள் பல ஏற்று விழாக்கள் பல கொண்டாடுவீரே!
தவிக்கின்றோம் உம்பிரிவை எண்ணி
தமிழ்வாழ தான் பிறந்த இனம் வாழ தளராது பணிசெய்தீரே
தமிழ் மக்கள் தலைநிமிர தன்னையே அர்ப்பணித்தீர்
தேடியும் இனிக்கிடையான் உம்மைப்போல் ஓர் வீரன்
வாடித் துடிக்கின்றோம் வாய்திறந்து பேசாயோ
மீளாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டீரோ!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

மாமாமார், மாமிமார்
மைத்துனர்கள்.

## வாழ்க்கையின் பரிமாணம்

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதை நழுவ விடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் அதைச் சென்று முடியுங்கள்
வாழ்க்கை ஒரு விடுகதை அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை வென்று காட்டுங்கள்.
வாழ்க்கை ஒரு வெகுமதி அதனை ஏற்று மகிழுங்கள்.
வாழ்க்கை ஒரு போட்டி அதில் மோதிப் பாருங்கள்
வாழ்க்கை ஒரு கலை அதை மேன்மைப்படுத்துங்கள்
வாழ்க்கை ஒரு வேதனை அதைத் தாங்கிச் சிரியுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதை ரசித்துக் கடவுங்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சினை நல்ல தீர்வு கண்டு மேன்மை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி எமக்கு கிடைப்பனோ உம்போல் ஒரு தலைவன்....

நேற்றிருந்தோம் இன்று இல்லை நம்பவே முடியவில்லை
காற்றிலே வந்த செய்தி கல்போட்டுப் போனதையா!
நூற்றிலே ஒரு மனிதன் நின்போல் இருப்பதில்லை.
ஆற்றிலே உள்ளவெள்ளம் அனைவருக்கும் உதவும் உந்தன்
வீட்டிலே மக்கள் வந்து விருப்பப்படி தாம் நடந்து
தப்புக்கள் செய்தாலும் தாராளமாக உதவும் உள்ளம்
அதுபோல ஒரு பண்பு இதுவரை நாம் பார்த்ததில்லை.
ஒத்த சகோதரபாச உணர்வு பொங்கும் உத்தமனே!
இத்தரையில் பாசம் முறிந்து நீ பாதியிலே போவதற்கு என்னகுறை?
சந்தித்த நாட்கள் இன்று சிந்திக்க வைக்கிறதே
உள்ளொன்று வைத்துப் புறமொன்று கதைத்தறியீர்
உள்ளதை உள்ளபடி கூறும் உம் பெருந்தன்மை
உம்முடன் பழகிய எமக்கெல்லாம் பாடமானதே!
இனி எமக்கு கிடைப்பனோ உம்போல் ஒரு தலைவன்

உந்தன் ஆத்மா சாந்திபெற பொற்பதி விநாயகப் பெருமானின்
பாதார விந்தங்களை வணங்குகின்றோம்.

பொறாமைக்காரன் நண்பனை இழந்தான்
கோபக்காரன் தன்னையே இழந்தான்

**பொற்பதி நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளமே வெந்து போனதே.....

குன்றென உயர்ந்த பண்பு
குவலயம் தழுவும் அன்பு
பஞ்செனு வெள்ளை நெஞ்சன்
பார்வையில் நீர்மை விஞ்சும்
என்றிவன் பெருமை பேசி
வியந்தது எங்கள் வாழ்வு
வஞ்சகன் காலன் வந்தான்
வெஞ்சினம் கொண்டான் நாங்கள்
கெஞ்சவும் கேளான் ஆகி
கதறவே கொண்டு சென்றான்
உடலமும் கருகி நீற
உள்ளமும் வெந்து போச்சு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– நண்பர்கள் –

**இக்காயம் நீக்கி இனி ஒரு காயத்திற்**
**புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்**
**எக்காலத்தில் உடல் வந்து எமக்கு ஆனதென்று**
**அக்காலம் முன்னே அருள் பெறலாமே.**

– திருமூலர் திருமந்திரம் –

**காலன் பருமுன்னே கண்பஞ்சடை முன்னே**
**பாலுண் கடைவாய் படுமுன்னே – மேல் விழுந்தே**
**உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே**
**குற்றாலத் தானேயே கூறு.**

– பட்டினத்தடிகள் பாடல் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசளிப்பு விழாவின்போது



பரியோவான் கல்லூரி விஞ்ஞான மன்ற
நாடகத்தில் ஓர் காட்சி



மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் நாடகத்தில் ஓர் காட்சி



வீட்டில் பரிசளிப்பு விழாவின்போது மங்கள விளக்கேற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையின் பூப்புனித நீராட்டு விழாவின் போது ஆசீர்வதித்தல்

# பொற்பதியின் பொதிகைத் தென்றல்

குடும்பத்தின் கனிஷ்டனாய் தோன்றியவனே
கல்வி விளக்காய் மலர்ந்தவனே!
இளமைக் கோலத்தில் புத்தொளிராய் திகழ்ந்தவனே
புதுமைகள் காண வளர்ந்திட்டாயே!
பொற்பதியின் பொதிகைத் தொன்றலில் மலர்ந்து
புகழ்மணம் பரப்பிட்டாயே
இளைஞர் குழாமோடு இங்கிதமாய் குலாவி
பசுமைப் புதிர்கள் புரிந்திட்டானே!
தாதையை இழந்திட்டாய், அன்னையே
துடிதுடித்துக் கொண்டிருக்க காலனோடு சென்றனையோ!
சோதரரும் ஆறாக்கண்ணீர் வடிக்கின்றனரே
சோதரியும் கண்ணீரும் கம்பலையும் ஆக
கதறித் துடிக்கின்றாளே!
கைப்பிடித்தவளும் ஆற்றொணாத் துயரத்தில்
கண்ணீர் மல்க பிரிந்தனையோ ஐயா!
மருத்துவத் துறையைக் காணப்போந்தாய்
இறுதியில் காலனோடு சங்கமித்தாயோ சுகந்தீபா!

**உறவினர்கள்**

# பொன் மொழிகள்

| | |
|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | - இன்பம், துன்பம் |
| வந்தாலும் போகாதது இரண்டு | - புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது இரண்டு | - பாவம், புண்ணியம் |
| அடக்கமுடியாது இரண்டு | - ஆசை, துக்கம் |
| தவிர்க்கமுடியாதது இரண்டு | - பொறாமை, கோபம் |
| எல்லோர்க்கும் சமமானது இரண்டு | - பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகமிக்க மாணவன்

திருமதி குணரத்தினம் ஆசிரியையின் பிள்ளைகள் நான்கு பேருக்கும் கல்வி கற்பிக்கும் பெருமை பெற்றவன். நான் தனியார் கல்வி நிறுவனத்தை நடத்துவதால் யாழ்ப்பாணத்தில் உள்ள அதிவிவேக மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பாக்கியம் பெற்றவன். அந்த வகையிலே அமரர் குணரத்தினம் சுகந்தீபன் கல்வியில் அதிவிவேக மாணவன் என்று சொன்னால் மிகையாகாது.

அமரர் சுகந்தீபன் கல்விகற்கும் காலத்தில் அவனிடம் காணப்பட்ட அபாரமான ஆற்றல்களையும் திறமைகளையும் கண்டு நான் வியந்ததுண்டு. இவருடைய இரண்டு சகோதரர்களும் சகோதரியும் உயர்தர வகுப்பிலே கணிதத் துறையைத் தெரிவு செய்து கற்கும்போது இவர் மட்டும் தாயாரின் விருப்பத்திற்கு ஏற்ப உயிரியல் துறையைத் தெரிவு செய்தார். அத்துறையிலே தனது திறமையை வெளிப்படுத்தி மருத்துவத்துறை மாணவராகி தாயாரின் விருப்பத்தை நிறைவு செய்தார்.

கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டு மற்றும் கலைத்துறையிலும் ஈடு பாடுடையவர். அத்துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி பலராலும் பாராட்டப்பட்டவர். அத்தகைய ஆற்றல் மிக்க ஒருவர் இளமைப்பருவத்திலே திடீரென இவ்வுலகைவிட்டுப் பிரிந்தமை எல்லாம் விதிப்படியே நடக்கும் என்ற யோகர் சுவாமிகளின் வாக்கை நாம் நினைவில் கொள்ள வைத்துள்ளது.

அன்னாரைப் பிரிந்து துயருறும் திருமதி சுகந்தீபனுக்கு ஆறுதல் கூறுவ துடன் அன்னாரது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவன் திருவருளை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**– க. வேலாயுதம் –**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிவிவேக மாணவன்

அமரர் சுகந்தீபனின் அன்னையாரின் குடும்பத்தினரை நான் நன்கு அறிவேன். அமரரின் தாய் அவரின் உடன்பிறப்புக்கள் அனைவரும் கல்வியில் உயர்நிலை அடைந்தவர்கள். அதனால் அமரரின் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் மிகவும் அக்கறை எடுத்தனர். பிள்ளைகளைக் கல்வியில் ஊக்குவிப்பதற்காக அவர்களின் வீட்டில் ஒரு சிறு பரிசளிப்பு விழாவினை வருடந்தோறும் நடாத்திவந்தனர். இவ்விழாவில் உற்றார், உறவினர் எனப்பலரும் கலந்து கொள்வர். இவ்வாறான ஒரு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நான், அதிஉச்ச அடைவினைப் பெற்ற அமரர் சுகந்தீபனைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியமையை இங்கு ஞாபகமூட்டி அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

– அ. பஞ்சலிங்கம் –
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
யாழ் இந்துக் கல்லூரி

## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயது மோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமிக்க கருமவீரன்

புலமைப் பரீட்சையில் புலமைத்துவம் பெற்று அறியாப் பருவத்தில் என்னைக் குருவாய் ஏற்றீரே! மாணவனுக்குரிய நற்பண்புகள் பெற்று மாணவத் திலகமாய் மிளிர்ந்தீர் - வகுப்பில் உன் நாமம் வினாவிடைகளோடு ஒலித்துக் கொண்டிருக்கும். வகுப்பு கலகலப்பாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். யாழ். மாவட்டப் பிரபல பாடசாலைகளில் அதாவது யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, பரியோவான் கல்லூரி போன்ற கூடங்களில் காலத்திற்குக் காலம் பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகள் பெற்று எமக்கும்பெருமை தேடித் தந்தீர். அத்துடன் வகுப்புகளில் உயர்வு பெற்றதுடன் கூடங்களில் நடக்கின்ற நானாவிதப் போட்டிகளிலும் பங்குபற்றி குணரட்ணம் சுகந்தீபன் என்ற மாணவக்கோலத்தை மாணவ உலகிற்கு இந்த ஈழத்திருநாட்டில் புரிய வைத்தீர்களே! அது மட்டுமா? க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதியபின் உறவினருடன் சிறிதுகாலம் நுவரெலியா மாவட்டப் பாடசாலை ஒன்றில் உயர்தர மாணவருக்கு விலங்கியல், பௌதீகவியல் திறம்படக் கற்பித்து சிறந்த ஆசான் என்று கூறுவதைக் கேள்விப்பட்டு ஆனந்தம் அடைந்தேன்.

ஏன் தந்தையார் தொழில்புரிந்த மாவட்டமான திருகோணமலையில் சண்முகவித்தியாலயத்திலும் உயர்தர மாணவருக்கு பௌதீகவியல் திறம்படக் கற்பித்து அம்மாணவர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் திறமையான புள்ளிகள் பெற்றதாக ஆசிரியர்கள் மூலமறிந்து ஆனந்தமடைந்தேன். தங்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்ததும் சுகந்தீபன் மருத்துவத் துறைக்குத் தெரிவானதைக் கேள்வியுற்று ஆசிரியர்களாகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற இனிய தொடருக்கேற்ப மருத்துவத் துறையில் சிறந்து மிளிரும் காலத்தில் சனீஸ்வரன் குறுக்கே வந்தகாரணமோ படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டாய். அதீத விவேகம் படைத்த மாணவனே நாடு நலமாக இருக்க நற்சேவை செய்வதை நடுவிலே நிறுத்தி எம்மைவிட்டுச் சென்றீரே. உந்தன் பிரிவால் ஆசிரியகுலமும் மாணவ உலகும் நண்பர்களும் காகித ஓடமாகத் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பிரானைப் பிரார்த்திக்கின்றேன்.

புலவர் சிவா

பட்டங்கள் மனிதரைக் கௌரவிப்பதில்லை
மனிதர்கள்தான் பட்டங்களைக் கௌரவிக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்க்குமிழி (நீர்க்குமிழி)

இயற்கை மரணங்களுக்கு இரங்கலுரை எழுதுவதே முன்னர் மரபாக விருந்தது. ஆனால் இன்று அகால மரணங்கள் மலிந்தும் அதற்கு இரங்கலுரை எழுதுவது மனதினை நெருடிப் பிசைகின்றவொன்றாகவிருக்கின்றது.

மருத்துவராக வரவேண்டியவரின் வாழ்வு இன்று பறிக்கப்பட்டுள்ளது. எந்த இலட்சியத்திற்காக முனைப்புடன் செயற்பட்டாரோ அதனை அடைய முன்னரே அவரது வாழ்வே முடிந்துவிட்டது. இது விதியா? மிகக் கூர்மையான பென்சில் எழுதிக் கொண்டிருக்கும்போது சட் என்று கூர் முறியும். சுகந்தீபனின் மதி நுட்பமும் அத்தகையவொன்றேயாகும்.

பெற்றோரும், பாடசாலைகளும் அவரை நன்றாகவே ஆற்றுப்படுத்தி மருத்துவபீடம் வரை அனுப்பியது. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் அவருக்குப் பெரிதுதானே! சூழ்நிலையால் அவர் இன்று எம்முன்னில்லை. நீர்க்குமிழியாயிற்று அவர் தம் வாழ்வு.

செயலிற் துறவு, அந்தரங்கச் சுத்தி, இறைபக்தி, குருபக்தி, பிறர்க்குதவுதல் இத்தியாதி நற்பண்புகள் கொண்டவர். இவரின் ஆளுமைப் பண்புகள் இவரை பெறுமானமிக்கவராக்கியது. அன்னாரின் "ஆகிருதி" ஆய்விற்குரியது. நயினைத் தில்லை வெளிப் பிடாரித் தாயிடம் அளவற்ற வைராக்கியமான பக்தி கொண்டவர். இவர்களது உபயமான பிடாரி அம்மன் வேள்வித் திருவிழாவிற்கு ஆண்டுதோறும் சென்றுவரும் தொண்டன்.

தீபதிலகமான சுகந்தீபன் ஆன்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்மனை வேண்டி, அவரை இழந்து நிற்கும் தாய் அவர்தம் துணைவியார் மற்றும் சகோதரங்களுக்கும் உறவினர்களுக்கும் அம்பாள் நல்லருள் பாலித்தருள வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

எனக்கென்ன மனக்கவலை
என் தாய்க்கல்லவோ தினம் தினம் என்கவலை

இங்ஙனம்
**இ. சிவபாதசேகரம்**
முன்னாள் முதல்வர்
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

கொக்குவில்.
2008.06.09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரப் பதிகம்

நிரை கழலரவம் சிலம்பொலியலம்பும்
நிமல நீறணித் திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பெரும் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலைய மர்ந்தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனி மேற்போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலைய மர்ந்தாரே.

பனித்திளங் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளங் துவாவாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலைய மர்ந்தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுங் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலைய மர்ந்தாரே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிறைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைய மர்ந்தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலைய மர்ந்தாரே.

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
கொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலைய மர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவருமறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலைய மர்ந்தாரே.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலைய மர்ந்தாரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரிய சித்திமாலை

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி 8 நாட்கள் படிப்பவர்கட்கு நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி தினத்தில் எட்டுத்தரம் படிப்பவர்கட்கு எட்டுச் சித்திகளும் கைகூடும். முழு நம்பிக்கையோடும் விநாயகரை எண்ணிப் படித்தல் வேண்டும். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள், ஐயமில்லை.

## ஸ்ரீ மகாகணபதி மந்திரம்

மூசிக வாகன மோதக கஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமனரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பூபல சாரபஷீதம்
உமா சுதம்சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்
அகஜர்னன பத்மார்க்கம் கஜானன மகர்நிஷம்
அநேகதந்தம் பக்தானாம் ஏகதந்தம் உபாஸ்மகே.

பந்த மகற்றும் அநந்த குணப்
    பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
    ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
    அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
    அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுவதும் நீக்கமற
    ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
    உறாத மேலாம் ஒளியாவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ முழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் எப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகிறோம்.

*காரியசித்தி மாலை முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நோ.

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றவரைக் கண்டால் பணிவரோ - கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து விளையுமோதான்

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் - தான்கறிவு
நூல் அளவே ஆகுமார் நுண்ணறிவு - மேலைத்
தலத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலம்மிக்க
நல்லாய் சொல் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே.

தீயாரைக் காண்பதுவும்தீதே - திருஅற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே
தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே
அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச அங்கங்கள்

1) வாரம் 2) திதி 3) நட்சத்திரம் 4) யோகம் 5) கர்ணம்

1) வாரம் - 7 நாட்கள்
2) திதி - 15 (வளர்பிறையில் 15, தேய்பிறையில்15)
3) நட்சத்திரம் - 27
4) யோகம் - 27
5) கர்ணம் - 11

**திதி : 15**

பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பெர்ணமி.

**திதிகள் :** வளர்பிறையில் 15 திதிகளும், தேய்பிறையில் 15 திதிகளும்
வளர்பிறையில் 15வது திதி பௌர்ணமி எனப்படும்.
தேய்பிறையில் 15வது திதி அமாவாசை எனப்படும்.

**நட்சத்திரங்கள் :** அச்சுவினி தொடக்கம் ரேவதி வரை 27 நட்சத்திரங்கள்

**யோகம் :** யோகங்கள் 27

முக்கியமான யோகங்கள் 4

1) அமிர்தயோகம்
2) சித்தயோகம்
3) மரண யோகம்
4) பிரபலாரிஷ்டயோகம்

இவற்றுள் அமிர்தயோகம், சித்தயோகம், சுபகாரியங்கள் செய்ய ஏற்ற யோகங்கள். மரணயோகம், பிரபலாரிஷ்ட யோசம், சுபகாரியங்கள் செய்ய ஏற்றவையல்ல.

**கர்ணங்கள் (11)**

| | | | |
|---|---|---|---|
| 1) பவம் | 2) பாலவம் | 3) கௌலவம் | 4) தைதுணை |
| 5) காளச | 5) வணிசை | 7) பத்திரை | 8) சகுனி |
| 9) சதுஷ்பாதம் | 10) நாகலம் | 11) கிந்துஷகினம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதிகளில் வணங்கவேண்டிய கணபதி

| | |
|---|---|
| 1) பிரதமை | - நிருக்த கணபதி |
| 2) துதியை | - பால கணபதி |
| 3) திருதியை | - தருண கணபதி |
| 4) சதுர்த்தி | - பக்தி கணபதி |
| 5) பஞ்சமி | - வீர கணபதி |
| 6) ஷஷ்டி | - சக்தி கணபதி |
| 7) சப்தமி | - சித்தி கணபதி |
| 8) அட்டமி | - உச்சிக் கணபதி |
| 9) நவமி | - விக்ன கணபதி |
| 10) தசமி | - ஷிப்ரகணபதி |
| 11) ஏகாதசி | - ஹேரம்ப கணபதி |
| 12) துவாதசி | - லக்சுமி கணபதி |
| 13) திரயோதசி | - மகா கணபதி |
| 14) சதுர்த்தசி | - விஜய கணபதி |
| 15) பௌர்ணமி (பூரணை) | - நிருத்யகணபதி |

## பன்னிரு இராசிகளும் ஆட்சிக்கிரகங்களும்

1. குருவிற்கு சொந்த வீடு - மீனம், தனு
2. செவ்வாய்க்கு சொந்த வீடு - மேடம், விருச்சிகம்
3. சுக்கிரனுக்கு சொந்த வீடு - இடபம், துலாம்
4. புதனுக்கு சொந்த வீடு - மிதுனம், கன்னி
5. சந்திரனுக்கு சொந்த வீடு - கற்கடகம்
6. சூரியனுக்கு சொந்த வீடு - சிங்கம்
7. சனிக்கு சொந்த வீடு - மகரம், கும்பம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | | | கர்க் கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனுசும் | விருச்சிகம் | துலாம் | கன்னி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | இராசிகள் | ஆட்சிக்கிரகங்கள் | நெருப்பு பூமி வளி நீர் இராசிகள் |
|---|---|---|---|
| 1 | மேடம் | செவ்வாய் | அக்கினி (நெருப்பு) |
| 2 | இடபம் | சுக்கிரன் | பூமி |
| 3 | மிதுனம் | புதன் | வாயு |
| 4 | கற்கடகம் | சந்திரன் | நீர் |
| 5 | சிங்கம் | சூரியன் | அக்கினி |
| 6 | கன்னி | புதன் | பூமி |
| 7 | துலாம் | சுக்கிரன் | வாயு |
| 8 | விருச்சிகம் | செவ்வாய் | நீர் |
| 9 | தனு | குரு (விழாழன்) | அக்கினி |
| 10 | மகரம் | சனி | பூமி |
| 11 | கும்பம் | சனி | வாயு |
| 12 | மீனம் | குரு | நீர் |

இராசிகள் – சரராசி, ஸ்திரராசி, உபயராசிகளாகப் பிரிக்கலாம்.

**சரராசி**

மேடம், கடகம், துலாம், மகர ராசியில் பிறந்தவர்களாவர். இவை அசைவுள்ள ராசிகள், அசைவற்ற ராசிகளையுடையவை.

ஸ்திர ராசிகள்
இடபம்
சிங்கம்
விருச்சிகம்
கும்பம்

மேற்கூறிய இராசியில் பிறந்தவர்கள் உழைப்பே உயர்வு தரும் என எண்ணுங்கள். எதிலும் துணிவுடன் செயற்படும் திறமையும், நிலையான சஞ்சலமில்லாத குணத்தையும், கொண்ட கொள்கையில் எந்தச் சூழ்நிலையிலும் மாறாத் தன்மையையும் உறுதியான மனப்பாங்கையும், கைத்தொழில்களைக் கற்கும் திறமையையும், எப்பொழுதும் ஏதோ ஒன்றைச் செய்துகொண்டிருக்கும் நிலையையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உபய ராசிகள்**

**அசைவுகள்** 1. மிதுனம்

2. கன்னி — அசைவுள்ளதும் சிலசமயங்களில்

3. தனுசு — அசைவற்ற நிலையிலும் உள்ள ராசிகள்

4. மீனம்

நாணல்போல் எதற்கும் ஈடுகொடுத்தும் போகும் மனப்பாங்கையும், மனித நேயத்தையும், பெருந்தன்மையையும் மிகவும் இரக்கமுள்ள மனதையும், அடிக்கடி சமயத்திற்கேற்ப மாறும் குணத்தையும் தரும். கொள்கையிலும் சமயத்திற்கேற்ப மாறும் நிலையுடையவர்கள்.

**ஆண் ராசிகள்** மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம்

**பெண் ராசிகள்** இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்.

## கிரகங்களின் அசைவுகளும், அங்கங்களும்

| | கிரகங்கள் | அசையும் காலம் | அங்கம் |
|---|---|---|---|
| 1 | சூரியன் | 1 மாதம் | சிரம் |
| 2 | சந்திரன் | $2\frac{1}{2}$ நாள் | முகம் |
| 3 | செவ்வாய் | $1\frac{1}{2}$ மாதம் | மார்பு |
| 4 | புதன் | | முதுகு |
| 5 | வியாழன் (குரு) | 1 வருடம் | வயிறு |
| 6 | சுக்கிரன் (வெள்ளி) | 1 மாதம் | அரை |
| 7 | சனி | $2\frac{1}{2}$ வருடம் | தொடை |
| 8 | ராகு | $1\frac{1}{2}$ வருடம் | தை |
| 9 | கேது | $1\frac{1}{2}$ வருடம் | கால் |

## கிரகங்களின் குணநலன்கள்

1. சாத்வீக குணமுடைய கிரகங்கள் புதன், குரு அன்பு, இரக்கம், பாசம், தன்னம்பிக்கை, தைரியம், நேர்மை, ஆன்மீகச் சிந்தனை. இவை அனைத்தும் தரும்.
2. ராஜ்ஸ குணமுடைய கிரகங்கள் (இராட்சத) சூரியன், சந்திரன், சுக்கிரன், கதை, கவிதை, இயலிசை நாடகம், தியாகம் தலைமை தாங்கும் தகுதி இவைகளைத் தருபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாமஸ (தாமதம்) குணமுடைய கிரகங்கள் : சனி, செவ்வாய், ராகு, கேது – சோம்பேறித்தன்மை, முன்கோபம், அறிந்தே தவறு செய்யும் குணமுடைய வர்கள்.

| | |
|---|---|
| **சுபக் கிரகங்கள் :** | குரு, சுக்கிரன், பூரண சந்திரன். |
| **அசுபக் கிரகங்கள் :** | சனி, செவ்வாய், ராகு, கேது, தேய்பிறைச் சந்திரன். |
| **ஆண் கிரகங்கள் :** | சூரியன், செவ்வாய் |
| **பெண் கிரகங்கள் :** | சந்திரன், சுக்கிரன், வியாழன், ராகு |
| **அலிக் கிரகங்கள் :** | புதன், சனி, கேது |
| **சரக்கிரகங்கள் :** | சந்திரன், செவ்வாய், ராகு, கேது. |
| **ஸ்திரக் கிரகங்கள் :** | சூரியன், சுக்கிரன் |
| **உபயக் கிரகங்கள் :** | புதன், குரு, சனி |

## கிரகங்களின் பார்வை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. குரு (வியாழன்) | 5, | 7, | 9 | |
| 2. சனி | 3, | 7, | (10) | வலிமை கூடியது |
| 3. செவ்வாய் | 4, | 8, | 7 | |
| 4. ராகு | 3, | 11, | 7 | |
| 5. கேது | 3, | 11, | 7 | |

## கிரகங்கள் பலன் கொடுக்கும் காலங்கள்

| | |
|---|---|
| 1. சூரியன் செவ்வாய் | – திசாபுத்தியின் ஆரம்பத்தின் பலன் கொடுக்கும். |
| 2. சந்திரன் புதன் | – எல்லாக் காலத்திலும் |
| 3. குரு சுக்கிரன் | – (திசாபுத்தி மத்தியில்) |
| 4. சனி, ராகு, கேது | – பிற்பகுதியில் பலன் கொடுக்கும். |

## மகாதெசா புத்தி

| | |
|---|---|
| 1. சூரிய திசை | – 6 வருடங்கள் |
| 2. சந்திர திசை | – 10 வருடங்கள் |
| 3. செவ்வாய் திசை | – 07 வருடங்கள் |
| 4. ராகு திசை | – 18 வருடங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வியாழ திசை - 16 வருடங்கள்
6. சனி திசை - 19 வருடங்கள்
7. புதன் திசை - 17 வருடங்கள்
8. கேது திசை - 07 வருடங்கள்
9. சுக்கிரன் திசை - 20 வருடங்கள்.

**வக்கிரம்**

சூரியன், சந்திரன், ராகு, கேது, தவிர மற்றக் கிரகங்களான செவ்வாய், வியாழன் (குரு) சுக்கிரன், சனி. இவைகள் தமது சுற்றுவட்டப்பாதையில் பின்நோக்கிச் செல்லும்பொழுது வக்கிரம்பெறும்.

**வர்க்கோத்தமம்**

ஒரு கிரகம், இராசிநிலையிலும், நவாம்சநிலையிலும் ஒரே இராசியில் இருப்பது வர்க்கோத்தமமம் எனப்படும்.

**வர்க்கோத்தமபலம்**

இராசியில் கால்கள் 9இல் சரராசியில் முதற்காலும், திரராசியில் ஐந்தாங்காலும், உபய ராசியில் 9ம் காலும் நிற்கும் கிரகங்கள் வர்க்கோத்தம பலமுடையவர்.

**பரிவர்த்தனை**

இருவேறு கிரகங்கள் தங்களது ஆட்சி வீடுகளில் மாறியிருப்பது பரிவர்த்தனை எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ் | சுக் | புதன் |
| சனி | | | சந்தி |
| சனி | | | சூரி |
| குரு | செவ் | சுக் | புதன் |

ஆட்சி வீடுகள்

| | | | |
|---|---|---|---|
| சந்தி ரன் | | | |
| | | | குரு |
| | | | |
| | | | |

இங்கு குரு வீட்டில் சந்திரனும் சந்திரன் வீட்டில் குருவும் பரிவர்த்தனையாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்சத்திரவர்த்தனம் :** ஒரு கிரகம் மற்ற கிரகத்தின் சாரத்தில் மாறியிருப்பது

உ+ம் : புதன் குரு சாரத்திலும், குரு புதன் சாரத்திலும் இருப்பது நட்சத்திரப் பரிவர்த்தனம் ஆகும்.

மேலே கூறப்பட்ட நிலைகளில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்குமானால் தான் பணியாற்றும் நிலையில் அல்லது தான் செய்யும் தொழில்முறையில் சாதனை படைப்பவர்கள்.

**உதாரணம் :** திருமதி இந்திராகாந்தி (முன்னாள் பாரதப் பிரதமர்) யின் ஜாதகத்தில் மூன்று கிரகங்கள் பரிவர்த்தனை யோகம் பெற்றதால் நாட்டிற்காகப் பல சாதனைகள் புரிந்தவர். அழியாப் புகழும் பெற்றவர்.

பரிவர்த்தனை பெற்ற கிரகம் எந்தப் பாவத்தில் (இடத்தில்) இருக்கிறதோ அந்தப் பாவ பலன் அதிகமாகும்.

## பாவங்களின் காரகத்துவம்

பன்னிரு ராசிகளை வைத்துக்கொண்டே மனிதனின் அனைத்துவிதமான பலன்களையும் கூறலாம். ஒவ்வொரு ராசிக்கும் ஒவ்வொரு வகையான தன்மைகளைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். உடற்பாகங்கள், வாழ்க்கைப் பருவங்களையும் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். பாவம் என்பதற்கு ராசி என்று பொருள் லக்னத்தை முதலாகக் கொண்டுதான் ராசிகளைக் கடிகார வலச்சுற்று முறையில் காணவேண்டும்.

பன்னிரு ராசிகளில் ஒருவரின் லக்னம் (உயிர்) எங்குள்ளதோ அதுவே 1ம் இடம் (1ம் பாவம்) தொடர்ந்து வலஞ்சழியாக 2ம், 3ம் ..... பாவங்களை எண்ணவேண்டும்.

**1ம் இடத்திற்குரிய** உறுப்பு தலை, நிறம் சொந்தச் செல்வாக்கு ஆகியவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

**இரண்டாவது பாவம்** (இடம், கண் மற்றும் தனம், வாக்கு, குடும்பம் இவற்றைக் குறிக்கும்.

**3ம் இடம்:** (3ம் பாவம்) கீர்த்தி, இளைய சகோதரர் அடிமை, வேலைக்காரர், நாய்க்கடி, போசனம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம். உறுப்பு காது (இடது).

**4ம் இடம் :** தாயைப் பற்றியது மற்றும் வித்தை, வீடு, வாகனம் ஆகியவற்றைப் பற்றி அறியலாம். உறுப்பு மார்பு.

**5ம் இடம் :** புத்திரர் பூர்வ புண்ணியம், சிந்தனை, இருதயம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6ம் இடம் :** (6ம் பாலம்) கடன், ரோகம், சத்துரு எதிர்ப்பு இவற்றைக் குறிக்கும்.

**7ம் இடம் :** களத்திரஸ்தானம் தாரம் அல்லது மனைவி, சுயதொழில், இச்சை காமம், பங்காளி ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**8ம் இடம் :** மறைவிடம், உடல் உறுப்பு, இறப்பு, ஆயுள், கடன், சிறை, விபத்து, நஞ்சு உண்டல், தடக்கி விழுதல், மரணம் நிகழும் முறை ஆகியவற்றைப் பற்றி அறியலாம்.

**9ம் இடம் :** பாக்கியம், தந்தை, தர்மம்ம, அதிஷ்டம் ஆகியவற்றைப் பற்றி அறியலாம். உறுப்பு தொடை.

**10 இடம் :** அரசு, தொழில் (பதவி) ஜீவனம், சமுதாய மரியாதை பற்றி அறியலாம். உறுப்பு உச்சி, முழங்கால்.

**11ம் இடம் :** இலாபஸ்தாபனம் (இலாபம்), மூத்த சகோதரம் பற்றி அறியலாம், மூட்டுக்குக்கீழே பாதத்திற்கு மேல், வலது காது ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

**12ம் இடம்** (பாலம்) விரயஸ்தானம், பிரயாணம், நஷ்டம், சயனம் ஆகியவற்றைப் பற்றி அறியலாம். உறுப்பு வலது கண்

## கிரக காரகன்

1. சூரியன் – பிதிர்காரகன்
2. சந்திரன் – மாதுருகாரகன்
3. செவ்வாய் – சகோதரகாரகன்
4. புதன் – வித்தியாகாரகன் (மாமன்)
5. வியாழன் – புத்திரகாரகன்
6. சுக்கிரன் (வெள்ளி) – களத்திரகாரகன்
7. சனி – ஆயுட்காரகன்
8. ராகு – பிணிகாரகன்
9. கேது – ஞானகாரகன்

## ஏழரைச்சனி அட்டமத்துச் சனி

சனி பகவான் ஒரு இராசியில் இரண்டரை வருடம் தங்கியிருப்பான். பின்பு அடுத்த இராசிக்கு அசைவான். அப்படியே வலஞ்சுழியாக அசைந்துவரும்போது ஒருவர் பிறந்த ராசிக்கு முதல் ராசிக்கு சனி பகவான் வரும்போது $7\frac{1}{2}$ ச் சனி ஆரம்பிக்கும். இது முதற்கூறு எனப்படும். அடுத்து அவர் பிறந்த ராசிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது $7\frac{1}{2}$ யின் நடுக்கூறு பின்பு அடுத்த ராசி (2½ வருடத்தின்பின் வரும்போது $7\frac{1}{2}$ யின் கடைக்கூறு ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மே | இட | மிது |
| கும் | | | கட |
| மகர | | | சிங்கம் |
| தனுசு | விரு | துலா | கன்னி |

2007ம் ஆண்டு ஆவணி முதல் சனி பகவான் சிங்கராசிக்கு வந்துள்ளான். இங்கு கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு $7\frac{1}{2}$ யின் முதற் கூறு $2\frac{1}{2}$ வருடத்தின் பின் கன்னி ராசிக்கு வரும்போது $7\frac{1}{2}$ நடுக்கூறு அடுத்து துலா ராசிக்கு வரும்போது $7\frac{1}{2}$ யின் கடைக்கூறு ஆகும்.

**அட்டமத்துச் சனி :** ஒருவர் பிறந்த இராசியிலிருந்து 7ம் வீட்டிற்கு சனி பகவான் இருக்கும்போது அவர்களுக்கு அட்டமத்துச் சனி.

உ +ம் : மகரராசியில் பிறந்தவர்களுக்கு இப்பொழுது அட்டமத்துச் சனி.

## பாடசாலைகளின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| யாழ் இந்து மகளிர் கல்லூரி - | 2346 |
| யாழ் மத்திய கல்லூரி - | 2184 |
| வேம்படி மகளிர் கல்லூரி - | 2187 |
| சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - | 2338 |
| யாழ் இந்துக் கல்லூரி - | 2431, 2553 |
| சென். பற்றிக்ஸ் - | 2388 |
| சென். ஜோன்ஸ் - | 2432 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி - | 2646 |
| வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் - | 6771 |
| மகாஜனக் கல்லூரி - | 3981 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி - | 2658 |
| மானிப்பாய் மகளிர் கல்லூரி - | 2788 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்

சிவசம்பு + சேதுப்பிள்ளை

- பாக்கியலெட்சுமி
- நடராஜா
- பரமசாமி
- பத்மநாதன்
- பழனிவேல்
- குணரட்ணம்
- சோதீஸ்வரி

சிவபாதசுந்தரம் + இரத்தினம்மா

- மகேஸ்வரன்
- சிவநேசரத்தினம்
- ஞானேஸ்வரன்
- சுதந்திரேஸ்வரன்
- சிவநேசராணி
- இராஜேஸ்வரன்
- சிவநேசமலர்
- சிவநேசஜோதி

குணரட்ணம் + சிவநேசரத்தினம்

- பார்த்தீபன் + துஷ்யந்தி
  - கேதாரன்
  - அபிராம்
- பிரதீபன்
- சுகந்தீபன் + யஷீலா
- தர்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



**29.04.2008 அன்று சிவபதமடைந்த**

**அமரர்**

## திரு. குணரட்ணம் சுகந்தீபன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன்வந்து உதவிய அயலவர், உறவினர், நண்பர்களுக்கும் அவரது ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்த அனைவரிற்கும் மற்றும் சகல கிரியைகளையும் நடாத்தி வைத்த அத்தனை பெரியோர்களுக்கும் மலர்மாலைகள், மலர் வளையங்களை வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கியோரிற்கும் இம்மலரினை அச்சிட்டுத்தந்த அச்சகத்தினருக்கும் மேலும் இன்று நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


இங்ஙனம்
தாயார், மனைவி, சகோதரர்
உறவினர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் படிகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org